KALAM -International Research Journal
Faculty of Arts and Culture
South Eastern University of Sri Lanka
Volume X Issue 2, 2016

# ஈழத் தமிழர்களின் சேமிப்பும் தங்க நகைகள் மீதான முதலீடும்

**எஸ். சுந்திரசேகரம்**
சிரேஸ்ட விரிவுரையாளர்
யாழ்ப்பாணபல்கலைக்கழகம்
இலங்கை

## ஆய்வுச் சுருக்கம்

சேமிப்பு பொருளாதாரத்தின் அணைத்து மட்டங்களிலும் முக்கியம் பெறுகின்றது. சேமிப்பாளர்கள் பல்வேறுபட்ட சேமிப்பு கருவிகளை தேர்ந்து எடுக்றின்றனர். அவை பௌதீக சொத்துக்கள் மற்றும் நிதிச் சொத்துக்கள் அல்லது வைப்புக்கள் சார்ந்ததாக உள்ளன. பௌதீக சொத்து சார்ந்த சேமிப்பு கருவிகளில் தமிழர்களின் சேமிப்பில் தங்க நகைகள் முக்கிய பங்கினை கொண்டிருக்கின்றன. இது அவர்களது சீதன மற்றும் சமூக கலாச்சார மரபில் இருந்து தோன்றியுள்ளது. சேமிப்பால் கிடைக்கும் வட்டி வருமானம் மற்றும் முதல் நயம் அல்லது நட்டம் என்பது அவர்கள் தேர்ந்து எடுக்கும் சேமிப்பு கருவிகளின் அடிப்படையில் வேறுபடுகின்றது. இவ் ஆய்வின் பிரதான நோக்கம் தமிழர்களின் பாரம்பரிய சேமிப்பு மூலமாக தொழிற்படுகின்ற தங்க நகைகள் மீதான சேமிப்பானது ஏனைய சேமிப்பு மூலங்களை விட கொண்டிருக்கின்ற நன்மைகளை எடுத்துக் காட்டுவதாகும். இரண்டாம் நிலை தரவுகள் மூலமாக பெறப்பட்ட தங்கத்தின் விலைகள், சேமிப்பு வட்டி வீதங்கள், தமிழர்கள் இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் சேமிக்கின்ற அளவுகளின் கணிப்பீடுகள் மற்றும் வெளிநாடுகளில் இருந்து கிடைக்கும் பண அனுப்புதல்கள் போன்ற தரவுகளின் அடிப்படையில் செய்யப்பட்ட பகுப்பாய்வின் முடிவுகளின் அடிப்படையில் தழிழர்களின் தங்க நகைகள் மீதான சேமிப்பானது கடந்த 20 ஆண்டுகளில் அதிக முதல்நயத்தினை பெற்றுக் கொடுத்ததோடு தங்க நகைகளை அணிவதால் அதிக உளதிருப்தியையும் உருவாக்கியுள்ளது. வடக்கு கிழக்கில் ஏனைய முதலீட்டுக்கான சூழல் குறைந்த நிலையில் மக்கள் தங்க நகைகளில் தங்கள் சேமிப்பினை பேணுவதன் ஊடாக அதிக முதல் நயத்தினையும் மனதிருப்தியையும் அடைகின்றனர். இவ் ஆய்வானது பருநிலை பொருளாதார இரண்டாம் நிலை தரவுகளை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. எதிர் காலத்தில் சிற்றின அடிப்படையில் முதலாம் நிலை தரவுகளை கொண்டு மேலும் ஆய்வுகள் செய்யும் போது இம் முடிவுகள் மென்மேலும் நிரூபிக்கப்படும்.

**திறவு சொற்கள்:** தங்கநகைகள், தமிழ்கள், சேமிப்பு மற்றும் முதலீடு

## அறிமுகம்

2002 ஆண்டு இலண்டனில் இருந்து உழைத்து சீட்டுகட்டி சேமிக்கப்பட்ட ரூபா பத்து இலட்சம் பணத்தை யாழ்ப்பாணத்தில் தங்கையின் திருமணத்துக்கு சீதமாக சேமிப்பதற்கு அண்ணன் ஒருவர் இலண்டனின் இருந்து இலங்கைக்கு அவருடைய குடும்பத்துக்கு அனுப்பியிருந்தார். யாழ்ப்பாணத்தில் விவசாயிகளாக இருந்து இடம்பெயர்ந்து கொழும்பில் வசித்த அக்குடும்பம் அப்பணத்தை இலங்கையில் உள்ள வணிக வங்கி ஒன்றில் 16 வீத நிலையான வைப்பில் 10 வருடங்களுக்கு வைப்பில் இட்டது. 2012 இல் வட்டியுடன் சேர்த்து ரூபா 18 இலட்சம் கிடைத்தது. திருமணம் நிர்ணயிக்கப்பட்ட நிலையில் இக் குடும்பம் ஒரு பவுன் ரூபா 60,000 ரூபா படி 30 பவுண் நகைகளை கொள்வனவு செய்தார்கள். 2002 இல் ஒரு பவுண் நகை ரூபா 6000.00 ஆகும். 2002 இல் வெளிநாட்டில் இருந்து பணம் கிடைத்தபோது வங்கியில் சேமிக்காது தங்க நகைகள் கொள்வனவு செய்து, தங்க நகை வடிவில் சேமித்து இருந்தால் அந்நாளில் அவர்கள் ஏறத்தாழ 166 பவுன் நகைகளை வாங்கி இருக்கலாம் (1000000/6000=166). 2012 இல் தங்க நகையிலான இந்த

சேமிப்பின் சந்தைப் பெறுமதி ஏறத்தாழ ஒரு கோடி ரூபா (166 x60000= 99,60,000) ஆகும். தங்க நகையில் சேமித்து இருந்தால் இந்த 10 வருடத்தில் அதை அணிந்ததால் ஏற்பட்ட உளத்திருப்திக்கும் ஒரு பெறுமதி இருக்கிறது. இந்த பண வடிவிலான சேமிப்பை திரட்டிய வங்கி 2002 ஆண்டு கொழும்பில் ஒரு பேர்சஸ் நிலத்தினை ரூபா 6 லட்சத்துக்கு கொள்வனவு செய்து அதனை 2012 இல் 60 இலட்சத்துக்க விற்றுள்ளது. மூன்று தசாப்தங்களுக்கு மேலாக யுத்தத்தால் அழிவடைந்த எம்மண்ணில் இக் குடும்பத்தை போன்று எத்தனை எத்தனை ஆயிரம் குடும்பங்களின் சேமிப்புக்களை வணிக வங்கிகள் கவர்ந்து எடுத்து தென்பகுதிக்கு அனுப்புகின்றன?

இக் கட்டுரையானது வெளிநாடுகளில் இருந்து இவ்வாறு வடக்குக்கு கிடைக்கும் அன்னிய செலவாணியிலான சேமிப்பானது எவ்வாறு வங்கியில் வெறுமனமே நிலையான வைப்பாக செல்கின்றது என்பதையும், அச்சேமிப்புக்கள் எவ்வாறு தென்பகுதிக்கு எடுத்துச் செல்லப்படுகிறன்றது என்பதையும், இச் சேமிப்புக்களை எப்படி வடக்கில் நிட்சயமற்றதன்மையின் மத்தியிலும் சேமிப்பை பெருக்க கூடிய வகையில் தங்க நகைகளில் முதலீடாக சேமிக்கப்படக்கூடிய வாய்ப்புக்களை ஆராய முற்படுகின்றது. குறிப்பாக வெளிநாடுகளை தளமாக கொண்ட சேமிப்பை தங்க நகையில் முதலிடுவதால் உருவாகும் நன்மை தீமைகளை எடுத்து விளக்குகின்றது.

## முன்னைய ஆய்வுகளின் மீளாய்வு

ஒரு தனிமனிதர், குடும்பம், தேசம், நாடு ஆகிய எல்லா மட்டங்களிலும் சேமிப்பு அவசியமானதாக காணப்படுகின்றது. “இல்லானை இல்லாளும் வேண்டாள். ஈன்று எடுத்த தாயும் வேண்டாள். கல்லான் ஆயினும் கைபொருள் உள்ளோனை எல்லோரும் முன்சென்று எதிர்கொள்வர்’’(ஔவையார்-நன்நெறி) என பழந்தமிழ் இலக்கியம் ஒன்று குறிப்பிடுகின்றது. இவர்கள் தங்களுக்கு கிடைக்கின்ற செலவிடக்கூடிய வருமானத்தில் நுகர்வு செலவுக்கு செலவு செய்த பணத்தை நீங்கி மிகுதியாக உள்ள வருமானமே சேமிப்பு ஆகும் (John Maynard Keynes (1936). நுகர்வு செலவை அதிகமாக கொண்டவர்கள் தங்கள் வருமானத்தில் குறைந்த அளவையே சேமிக்க முடியும். எனவே குடும்பங்களும் தேசங்களும் பின்வரும் வழிகளில் சேமிப்பை அதிகரிக்கலாம்.

1. இருக்கின்ற தொழிலில் வருமானத்தை அதிகரித்தல்.
2. வருமான மூலங்களை விரிவுபடுத்தல்.
3. குடும்பத்தில் புதிய அங்கத்தவர்களை வேலைக்கு அமர்த்தல்.
4. குடும்பங்களின் நுகர்வுச் செலவைக் குறைத்தல்.
5. குடும்பங்கள் தங்கள் தகுதிக்கு மீறிய ஆடம்பர செலவுகளைக் குறைத்தல்.
6. புத்திசாலித்தனமாக அதிக நன்மை தரக்கூடிய சேமிப்பு கருவிகளைத் தேர்ந்து எடுத்தல்.
7. சேமிப்பின் வினைத்திறனை அதிகரித்தல்.

மேற்குறிப்பிட்ட வழிகளில் சேமிப்பு அதிகரிக்கப்பட்டாலும், சேமிப்பின் திரட்சியானது சேமிப்பு கருவியைப் பொறுத்து தீர்மானிக்கப்படுகிறது. ஒருவர் நிறைய உழைக்கலாம். நிறைய வருமானத்தை பெறலாம். நிறைய சேமிக்கலாம். ஆனால் அவர் பொருத்தமான சேமிப்பு முறைகளை தேர்ந்து எடுக்காமல் இருக்கும் போது அவருடைய சேமிப்பு தன்னை அறியாமல் கரைந்து போகின்றது. உதாரணமாக ஒருவர் வங்கியில் 10 % வட்டியில் ரூபா 100,000 ஐ ஒரு வருட முதிர்ச்சியில் வைப்புச் செய்கிறார். வருட முடிவில் அவருக்கு ரூபா 110,000 கிடைக்கின்றது. ரூபா 10,000 வட்டி வருமானம் கிடைத்ததாக திருப்தி அடைகிறார். ஆனால் அவ்வருடம் பணவீக்கம் 12 வீதமாக இருந்தால் இந்த சேமிப்பால் அவருடைய பணத்தில் பெறுமதி ரூபா 12000 ஆல் குறைவடைந்து ரூபா 98000 ஆக இருக்கின்றது. முதலுக்கு வட்டியை இழந்தது மட்டும் அல்ல, முதலில் கூட ரூபா 2000 ஐ இழந்து விடுகிறார். மிகவும் கஸ்டப்பட்டு உழைத்த, பலவற்றை விட்டுக்கொடுத்து சேமித்த பணமானது நாட்டின் பணவீக்கத்தால் தங்களை அறியாமலேயே கரைந்து செல்கின்றது. இலங்கையில் வணிக வங்கிகளில் வைப்பு செய்கின்ற மக்களில் முதல் இடத்தினை வகிப்பது வடக்கு கிழக்கு மாகாணங்கள்

ஆகும். இந்த வங்கி வைப்புக்களால் நாம் அடைகின்ற இழப்பு மிகவும் உயர்வானதாகவும் அநேகமான வைப்பாளர்களுக்கு தாங்கள் நிதி ரீதியாக சுரண்டப்படுகிறோம் என உணராத வகையில் அவர்களுடைய வைப்புக்கள் சுரண்டப்படுகின்றன. ஒரு வருட நிலையான வைப்புக்கான தற்போதைய வட்டி வீதம் ஏறத்தாழ 6 வீதம் ஆகும். ஆனால் கடன்களுக்கான வட்டி வீதம் 12 இலும் உயர்வானதாகும். முதலுக்கு சொந்தக்காரன் பெறுகின்ற வட்டியை விட அதை ஒருவரிடம் பெற்று இன்னொருவருக்கு கொடுக்கும் இடையீட்டு வங்கி நிறுவனம் அதிக அதிக வட்டியை சம்பாதிக்கின்றது. கடனில் ஆபத்து அதிகம் என வாதிட முடியாமல் உள்ளது. நிதிச்சட்டங்களின் பிரகாரம் கடன் பெற்றவரின் வங்கிக் கணக்கில் இருந்து மட்டும் அல்ல, பிணை நின்றவரின் வங்கிக் கணக்கில் இருந்து கூட அவர்களின் அனுமதி இல்லாமலே கடன் நிலுவைகள் எடுக்கப்படுகின்றன. வங்கிகள் கொழுக்கின்றன. அன்மையில் இலங்கை மத்திய வங்கி (2013) வெளியிட்ட தரவின்படி தேசிய அடிப்படையில் ஒரு வங்கிக் கிளைக்கு மக்களின் எண்ணிக்கையில் (ஒரு இலட்சம் மக்களுக்கு எத்தனை வங்கிக் கிளைகள்) யாழ்ப்பாண மாவட்டம் (23) கொழும்புக்கு (32) அடுத்து இரண்டாம் நிலையில் இருக்கின்றது. வவுனியா மாவட்டம் (20) மூன்றாம் இடத்தில் இருக்கின்றது. மன்னார் நான்காம் இடத்தில் (19) காணப்படுகின்றது. Sudha *et al* (2014) இந்தியாவில் பட்டுக்கோட்டை நகரத்தில் செய்யப்பட்ட ஆய்வில் தங்க நகைகளில் முதலீட்டை தீர்மானிக்கும் பல காரணிகளை எடுத்துக் காட்டுகின்றனர்

## வடக்கின் சேமிப்பு பழக்க வழக்கங்கள்

இலங்கையின் வடக்கு மக்கள் ஏனையவர்களுடன் ஒப்பிடும் போது சேமிப்பு பழக்கம் அதிகமானவர்களாக இருந்துள்ளனர். (வி.நித்தியானந்தன்.2002) இவர்களுடைய சேமிப்பு வழிமுறைகளாக பின்வருவன இருந்துள்ளன.

1. தங்க நகைகளில் சேமித்தல்.
2. சீட்டுக்கட்டுதல்.
3. பணச்சடங்கு.
4. முறைசாரா முறைகளில் வட்டிக்கு பணம் கொடுத்தல்.
5. கலாச்சாரசடங்குகளில் பணம் பொருள் வழங்குதல்.
6. கால்நடைகளில் சேமித்தல்.(மாடுகள், ஆடுகள்)
7. நிலம், வீடு, கட்டிடங்களில் சேமித்தல்.
8. பெருந்தோட்டம். (குறிப்பாக தெங்கு பயிர்செய்கை)
9. கல்வியில் சேமிக்கப்பட்மை.
10. வங்கிகள், நிதிக்கம்பனியில் சேமித்தல்.
11. காப்புறுதி மற்றும் முறிகள், பங்குகள், ஆவணங்களில் சேமித்தல்.

மேற்குறிப்பிட்ட சேமிப்பு முறைகள் ஊடாக தமிழ்களின் சேமிப்புக்கள் இருந்த போதும் தங்க நகைகளில் சேமிப்பு செய்வது பாரம்பரிய ரீதியான முக்கியத்துவம் பெற்று வந்துள்ளது. தமிழர் மரபில் காணப்படும் சீதன முறமையானது தங்க நகைகள், கால்நடைகள், வீடுகள், காணிகள், கட்டிடங்களில் சேமிக்க தூண்டியுள்ளது. இந்த சேமிப்பு நடத்தையானது பல மறைமுகமான பொருளாதார நன்மைகளை கொடுத்துள்ளது.

வடபகுதி மக்களின் சேமிப்புக்கான வருமான மூலமாக யுத்தத்துக்கு முன்னர் பணப்பயிர் வருமானங்கள், மரக்கறிச் செய்கை வருமானங்கள், மீன்பிடி வருமானங்கள், அரச உத்தியோக சேவை வருமானங்கள் காணப்பட்டன. பல லொறிகளில் வடபகுதியில் விளைவிக்கப்பட்ட விவசாயப் பொருட்களை தென்பகுதிக்கு எடுத்து சென்ற வடபகுதி மக்கள் அதிக வருமானத்தை பெற்றனர். இதேபோன்று புகையிரதம் வடபகுதி அரச உத்தியோகத்தர்களை தென்பகுதிக்கு எடுத்த சென்று அதன்வழி வருமானத்தை உழைத்தனர். இந்த வருமான மூலங்கள் சேமிப்புக்களை அதிகரித்தன. சேமிப்புக்கள் மேலே குறிப்பிட்ட வடிவங்களில் மேற்கொள்ளப்பட்டன. இச் சேமிப்புக்கள் வடபகுதியிலேயே முதலீடு செய்யப்பட்டன. தென்பகுதியில் இருந்து பெறப்பட்ட வருமானத்தில் இருந்து சேமிக்கப்பட்ட சேமிப்புக்கள் நகைவடிவிலேயோ அல்லது ஏனைய சொத்துக்கள் வடிவிலோ வடபகுதியில் சீதனமாக வடபகுதியிலேயே முடங்கி இருந்தன. அவை தென்பகுதிக்கு நிலைமாற்றப்பட்டமை ஒப்பீட்டு ரீதியில் குறைவானதாகும்.

**யுத்தமும் சேமிப்பும்**

1970 களின் பிற்பகுதியில் தீவிரமடைந்த இன முரண்பாடுகளும் அதை தொடர்ந்து 1980 களில் ஆரம்பிக்கப்பட்ட யுத்தமும் வடபகுதி மக்களின் சேமிப்பு கோலங்களில் பல மாற்றங்களைக் ஏற்படுத்தி இருந்தன. வடபகுதியில் விவசாயத்தின் மூலமான வருமான மூலங்கள் தடைப்பட்டன. தென்பகுதிக்கு மனிதவளத்தை விற்பனை செய்வதன் மூலம் கிடைத்த வருமானமும் தடைப்பட்டது. அரச உத்தியோகத்தில் கல்வியில் தரப்படுத்தல் கொள்கையை தொடர்ந்து பொதுத்துறையில் சிங்கள மக்கள் அதிக வேலைவாய்ப்புக்களை பெற்றனர். இவை வடபகுதி மக்களுக்கு அரச சேவை ஊடாக கிடைத்த வருமானத்தையும் அதன்வழி திரட்டப்பட்ட சேமிப்பையும் தடைசெய்தது. தமிழ் மக்கள் கல்வியில் செலவு செய்து தமது வருமானத்தை பிள்ளைகளின் கல்வியில் சேமித்து பெற்ற சிறந்த பெறுபேறு கல்வியில் தரப்படுத்தல் காரணமாக இல்லாமல் சென்றது. யுத்த காலம் பல வருமான மூலங்ககளை மூடி வடபகுதி மக்களின் சேமிப்புக்களை ஸ்தம்பிதமடைய செய்த அதேவேளை பல புதிய வருமான மூலங்களை உருவாக்கியுள்ளது. அந்தவகையில் வெளிநாட்டு உழைப்பு, குறிப்பாக அபிவிருத்தியடைந்த நாடுகளில் அகதி அந்தஸ்து பெற்ற பல தமிழர்கள் தங்கள் வருமான மூலங்களை பெருக்க தலைப்பட்டனர். இந்த வகையில் இவர்கள் பிரித்தானியாவில் ஏற்கனவே கல்வி பின்புலத்தில் குடியேறிய தமிழர் பரம்பரையை விட அகதி அந்தஸ்து பெற்று புதிய பரம்பரை ஒன்று மிகவும் காத்திரமான அன்னிய செலவாணி சம்பந்ததியத்தை பெறத்தக்க வகையில் வளர்ந்தது. பிரித்தானியாவில் மட்டும் ஏறத்தாழ இரண்டு இலட்சம் இலங்கை தமிழர்கள் இந்த பரம்பரையை சார்ந்தவர்களாகவும், சுமார் ஒருலட்சம் தமிழர்கள் கல்வி சார்ந்து குடியேறியவர்களாகவும் உள்ளனர். இதேபோன்ற பிரான்ஸ் சுவிஸ்லாந்து, நோர்வே, சுவீடன், டென்மார்க் போன்ற ஐரோப்பிய நாடுகளிலும் பல இலட்சம் தமிழர்கள் அகதி அந்தஸ்து பெற்று பலமான வருமான மூலங்களைக் கொண்டு வாழ்கின்றார்கள். அவுஸ்ரோலியா, நியூசிலாந்து போன்றவற்றிலும் கல்விப்பின்புல குடியேற்ற தமிழர்கள் அதிகளவில் வாழ்ந்து வருகின்றனர்.

கனடாவில் மட்டும் ஏறத்தாழ மூன்றரை இலட்சம் தமிழர்கள் வாழ்வதாக புள்ளிவிபரங்கள் கூறுகின்றன. இவ்வாறு இலங்கையின் வடக்கு – கிழக்கில் போர் காரணமாக இடம்பெயர்ந்து வளர்ச்சியடைந்த வெளிநாடுகளில் ஏறத்தாழ ஒரு மில்லியன் மக்கள் இலங்கையுடன் தொடர்புண்டு வாழ்கின்றனர். இவர்கள் கல்விப்பின்புலத்துடன் குடியேறிய தமிழ் மக்களை விட கடின உழைப்பாளர்களாகவும், ஏற்கனவே வடபகுதியில் விவசாயத்திலும் மீன்பிடியிலும் கடின உழைப்பாளர்களாகவும் திகழ்ந்துள்ளனர். இக்கடின உழைப்பானது வெளிநாடுகளுக்கு சென்றதால் இவை வடபகுதிக்கு பலமான வருமான மூலமாகவும் அதன்வழி சேமிப்பையும் உயர்த்தியுள்ளது. அதிகமான அன்னிய செலவானியை வடகிழக்குக்கு அனுப்புகிறார்கள். இந்த சேமிப்பு யுத்தத்துக்க முன்னர் இருந்த சேமிப்பு மூலங்களை விட பலமானதாக இருந்து வருகின்றது. யுத்தத்துக்கு முன்னர் சேமிப்பில் உறுதியற்றதன்மை காணப்பட்டது. காலநிலை மாற்றங்களால் விவசாய உற்பத்திகளில் வீழ்ச்சி ஏற்பட்ட போது அதன் வழியான சேமிப்புக்களும் வீழ்ச்சியடைந்தன.

அரசாங்கத்தில் பொருளாதார கொள்கைகளில் ஏற்பட்ட மாற்றங்களின் போது இச் சேமிப்புக்கள் தளம்பலடைந்தன. ஆனால் வெளிநாட்டு சம்பாத்தியத்தின் மூலமான சேமிப்பில் உறுதிப்பாடு அதிகமாக காணப்படுகின்றது. இந்த வருமானங்கள் உறுதியான பொருளாதாரத்தை கொண்ட நாடுகளில் இருந்து திரண்டப்படுவதால் அவை உறுதியாக இருந்து வருகின்றன. அனேக தமிழர்கள் வெளிநாடுகளிலிருந்து பெருந்தொகைப் பணத்தை சகோதரிகளின் சீதனத்திற்காக அனுப்பியிருக்கிறார்கள். வெளிநாட்டில் வசித்தாலும் வசிக்காவிட்டாலும் சகோதரிகளுக்கு திருமணம் செய்து கொடுப்பது என்பது தமிழ் சகோதரர்களின் கடப்பாடு என்ற வகையில் அதிக பணம் வடக்கு அனுப்பப்படுகிறது(Tharmalingam 2011).

அட்டவனை 1 இலங்கைக்கு வரும் வெளிநாட்டுப் பண அனுப்புதல்களை விபரிக்கிறது.

இலங்கைப் பொருளாதாரம் பலவீனமான போது தமிழர்களின் இந்த வருமானங்கள் பலமானதாக அமைந்துள்ளது. உதாரணமாக இலங்கையில் தீவிரமான யுத்தம் நடைபெற்ற காலத்தில் இலங்கை ரூபாவின் பெறுமான தேய்வு ஏற்பட்ட போது வெளிநாட்டில் இருந்து பணம் அனுப்புவர்கள் அதிக நன்மைகளைப் பெற்றார்கள். உதாரணமாக ஒரு ஸ்ரேலிங்பவுண் யுத்த காலங்களில் ரூபா 230 க்கு சென்றது. ஆனால் யுத்தம் முடிவடைந்த பின்னர் இது குறைவடைந்து ரூபா 180 க்கு வீழ்ச்சியடைந்தமையை அவதானிக்கலாம். இந்த சேமிப்பு மூலங்களில் ஏற்பட்ட மாற்றங்களில் அதாவது வெளிநாட்டு வருவாய்களை தளமாக கொண்ட சேமிப்பு நடவடிக்கைகளின் பின்வரும் பண்புகளை அவதானிக்கலாம்.

## தங்க நகைகளின் சேமிப்பு

தமிழ் மக்கள் பாரம்பரிய காலத்தில் இன்று வரை திருமணத்தின் போது சீதனம் கொடுக்கின்ற மரபைக் கொண்டுள்ளனர். இச் சீதனங்களில் முக்கியமான இடத்தை வகிப்பது தங்க நகைகள் ஆகும். ஆண்களுக்கு பெண்கள் சீதனம் கொடுக்கும் நடைமுறை இருந்து வந்த போதும் சீதனத்தின் உருவாக்கத்தில் ஆண்களே அதிக பங்கு கொள்கின்றனர். இத்தங்க நகைகள் வடிவிலான சீதனமானது புராதன காலத்தில் உயர்வாக இருந்துள்ளது. இன்று இவை அவற்றின் பாவனையில் குறைவாக இருந்த போதும் சீதனத்தில் பிரதான பங்கை வகிக்கின்றன. தமிழர்கள் சேமிப்பை தங்க நகையில் முதலிடுவதால் பின்வரும் அனுகூலங்களைக் கொண்டிருக்கின்றார்கள்.

1. தங்கம் உலகில் ஒப்பீட்ட ரீதியில் குறைவாக இருப்பதால் அதன் மொத்தமான நிரம்பல் மாறாமல் இருக்கின்றது. இதன் காரணமாக உலக சந்தையில் தங்கத்தின் விலை தொடர்ச்சியாக அதிகரித்து வந்துள்ளது. இது 2012 வரை உச்சமான நிலைக்கு (60,000) சென்று பின்னர் குறைவடைந்தது. தற்போது ரூபா 45000 அண்மித்தாக இருக்கின்றது. தொடர்ச்சியான விலை அதிகரிப்பு தங்க நகையில் சேமிப்பவர்களுக்கு ஓர் மூலதன நயத்தை பெற்றுக்கொடுத்துள்ளது. நாம் ஆரம்பத்தில் குறிப்பிட்ட உதாரணத்தின் படி ஏறத்தாழ 10 மடங்கு விலை அதிகரிப்பு இருந்துள்ளது. வரைபடம் 1 ஆனது அமெரிக்க டொலரில் உலக சந்தையில் ஒரு கிராம் தங்கத்தின் விலையை எடுத்துக் காட்டுகின்றது.

2. பணவீக்கம் காரணமாக தங்க நகை சேமிப்புக்களின் பெறுமான அதிகரிப்பு ஏற்படுகின்றது. பணவீக்க காலத்தில் தங்க நகைகளின் பெறுமதி அதிகரிக்கின்றது. அரசாங்கத்தின் அதிகாரபூர்வமான பண வீக்கத்தை விட நடைமுறையில் உள்ள பணவீக்கம் உயர்வாக இருப்பதால் தங்க நகையில் சேமிப்பவர்கள் அதிக நன்மைகளை பெறுகின்றனர். தங்கத்தின் விலை பருநிலைப்பொருளாதாரக் காரணிகள் மற்றும் நாட்டின் கொள்கைகள் காரணமாக வேறுபடுகின்றது. வரைபடம் 2 இந்தியாவின் தங்கத்தின் விலையின் கோக்கைக் காட்டுகின்றது.

3. தங்க நகைகளில் சேமிப்பதால் குடும்ப அங்கத்தவர்கள் நகைகளை அணிவதால் ஏற்படும் உளத்திருப்தியை அனுபவிக்கின்றனார்கள். சமய மற்றும் கலாச்சார விழாக்களில் இந்நகைகள் அணிவதால் மக்கள் மகிழ்ச்சியடைகின்றனர். பொருளியலில் இம் மகிழ்ச்சிக்கும் ஓர் பெறுமதி இருக்கிறது. இது தங்க நகைகளில் சேமிப்பதால் ஏற்படுகிறது.

4. தங்க நகைகளை திரவத்தன்மையாக மாற்றுதல் சுலபம். உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் தங்க நகைகளை பணமாக மாற்றிக் கொள்ளுதல் ஏனைய நிதிச் சொத்துக்களை விட இலகுவானதாக இருக்கின்றது.

5. தங்க நகைகளில் சேமிப்பது பாதுகாப்பனதாக இருக்கிறது. தங்க நகைகளில் சேமிப்பானது பாதுகாப்பனதாக மாறிவிட்டது. வணிக வங்கிகள் பாதுகாப்பு பெட்டக வசதிகளை செய்து கொடுப்பதால் இப்பாதுகாப்பு மென்மேலும்

அதிகரிக்கின்றது. வீடுகளில் கூட ஏனைய பௌதீக சொத்துக்களை விட தங்க நகைகளை பாகாப்பாக பேண முடிகின்றது.

6. தங்க நகைகளில் சேமிப்பது நிதி இழப்பு குறைவானதாகும். உலகப் பொருளாதார நெருக்கடியான சூழ்நிலைகளில் டொலரில், யூரோவில் சேமிக்கும் போது அவை பொருளாதாரமந்த காலத்தில் பெறுமதியை இழக்கின்றன. சில காலங்களில் சில நாணயங்களில் சேமிப்பு பாரிய மூலதன இழப்பை ஏற்படுத்துகின்றது. தங்க நகைகளைப் பொறுத்தவரை நாட்டின் பொருளாதார ஸ்திரமற்று செல்லுகின்ற போது தங்கத்தின் விலை அதிகரிப்பால் தங்க நகைகளின் விலைகள் அதிகரிக்கின்றன.

7. தங்க நகைகளில் சேமிப்பானது பிணையாக பயன்படுத்த உதவுகின்றது. தமிழ் மக்களின் ஓர் அவசர தேவைக்கு உடனடியாக தங்க நகைகளை பிணையாக வைத்து பணத்தை கடனாக பெறமுடிகின்றது. தமிழ் சமூகத்தில் புதிதாக திருமணம் செய்த தம்பதிகள் ஓர் ஐந்து லட்சத்துக்கு புதிய தொழில் ஒன்றை தொடங்குவதற்கு தேவையான மூலதனத்தை இந்த தங்க நகைகளை அடைவு வைத்து சில மணித்தியாலயங்களில் பெற முடிகின்றது. தங்க நகைகளை கொண்டிராத சமூகத்தில் இது மிக க'டமானதாகும். பல வங்கிகளுக்கு ஏறி இறங்கி, பலரின் தயவிலேயே ஓர் கடனை பல மாதங்களுக்கு பின்னர் பெறமுடிகின்றது.

8. தங்க நகைகள் ஆபத்துக்கு கைகொடுக்கும் தோழனாகவும் தொழிற்படுகின்றன. அமிர்தலிங்கம்(2010 மற்றும் 2009) செய்த ஆய்வின்படி மட்டகளப்பு மாவட்டத்தில் படுவான்கரை பிரதேசத்தில் இருந்துஇராணுவக்கட்டுப்பாட்டுக்குள் மட்டக்களப்பு நகரத்துக்கு இடம் பெயர்ந்த மக்களுக்கு முதல் ஐந்து நாட்களும் அரசாங்கம் உதவவில்லை, சிவில் அமைப்புக்கள் உதவவில்லை, அரசசார்பற்ற நிறுவனங்கள் உதவவில்லை, ஏன் சொந்தக்காரர் கூட உதவவில்லை. இடம் பெயர்து நகரத்துக்குள் வந்தவுடன் உடனடியாக உதவியது தங்க நகைகள் ஆகும். தங்க நகையில் சேமிப்பானது அனர்த்த அழிவுகளில் இருந்து தமிழ் மக்களை உயிர் வாழ உதவி செய்துள்ளது என்பதை யுத்தகால அனுபவங்கள் எமக்கு நிரூபித்துள்ளன.

9. சொத்துக்களைஇடம்மாற்றுவதில் தங்க நகை வடிவிலான சேமிப்பு சொத்துக்கள் இலகு தன்மையுள்ளனவாக காணப்படுகின்றன. கனடாவில் குடியுரிமை பெற்ற குடும்பங்கள் வட பகுதியை விட்டு நீங்கும் போது தங்களுடைய வீட்டை காணியை கட்டிடத்தை எடுத்து செல்ல முடியமல் இருந்தது. இவற்றை உடனடியாக நல்ல விலையில் விற்க முடியாமல் இருந்தது. ஆனால் 100 பவுனுக்கு மேற்பட்ட தங்க நகைகளை குடும்பம் சர்வசாதாரணமாக ஓர் இடையூறும் இல்லாமல் கனடாவுக்கு எடுத்து சென்றுள்ளது. இவ்வாறு நாட்டுக்குள்ளும் நாடுகளுக்கு இடையிலும் தமது சேமிப்பினை பணம் போன்று அதேநேரம் அவற்றை அணிவதால் ஏற்படும்மகிழ்ச்சியுடன் பிறிதொரு இடத்துக்கு பரிமாற்றம் செய்ய முடிகின்றது. வெளிநாடுகளில் வாழும் தமிழர்கள் தங்கநகை வடிவில் வைத்திருக்கும் சொத்துக்கள் குறிப்பிடக் கூடிய பங்கினைக் கொண்டிருக்கின்றன. இவைகளில் குறிப்பிடக் கூடியளவு தாயகத்தில் இருந்து தாங்கள் குடிபெயர்ந்த நாடுகளுக்கு எடுத்து செல்லப்பட்டுள்ளன.

10. பிறருக்கு உதவி செய்வதில் தங்க நகைகள் பயன்படுத்தப்படுகின்றன. உதவி பெறுபவர்கள் இதன் மூலம் நன்மை அடைகிறார்கள். திருமண வைபவங்கள் , பூப்புனித நீராட்டு விழாக்கள் போன்ற நிகழ்வுகளில் குறிப்பிடக்கூடியளவு தங்க நகைகளை உறவினர்கள், நண்பர்கள் வழங்குகிறார்கள். இது மணமக்களுக்கு பல வழிகளில் உதவி புரிகின்றது. பின்னர் இது திருப்பி செலுத்தப்பட்டாலும் பணத்துக்கு நெருங்கிய பதிலீடு ஒன்றை பெறுவதால் பணப்பிரச்சினைகளை தவிர்க்க முடிகின்றது.

11. தங்கத்தில் முதலீடு செய்து குறும்கால நீண்ட கால விலைமாற்றத்தால் பணத்தை சம்பாதிக்க முடிகின்றது. நாட்டில் நிதிச் சந்தையில் உள்ள ஏனைய செத்துக்கள் போன்று தங்க நகைகளை சேமிப்பாகவும் அதேநேரம் ஒரு வியாபாரமாகவும் பணம் சம்பாதிக்க முடிகின்றது. பின்வரும் வரைபடம் இலங்கையில் தங்கத்தின் விலையில் குறும்கால அசைவுகளைக் காட்டுகின்றது. 2013 யூன் மாதத்துக்கும் ஆகஸ்ட் மாதத்துக்கும் இடையில் ஒரு அவுன்ஸ் தங்கத்தின் விலை ரூபா 30 000 ஆல் அதிகரித்துள்ளது. வரைபடம் 3 இலங்கையில் தங்கத்தின் குறும்கால விலை அசைவுகளை காட்டுகின்றது.

## தங்க நகை சேமிப்புக்களில் உள்ள ஆபத்துக்கள்

மேற்குறிப்பிட்டவாறு தங்க நகைகளில் சேமிப்பில் பல நன்மைகள் கிடைக்கப் பெற்றாலும் பல தீமைகளும் உருவாக வாய்ப்பு இருக்கின்றது.

1. விலை வீழ்ச்சி: 2012 இல் பவுன் ஒன்று ரூபா 60,000 க்கு வாங்கிய ஒருவர் 2015 இல் அவற்றை விற்பதாக இருந்தால் ஏறத்தாழ 15,000/= ஐ இழக்க வேண்டி இருக்கின்றது. வட்டியையும் இழந்து முதலிலும் இழப்பு ஏற்பட்டுள்ளது. இது ஓர் அசாதாரண சூழ் நிலையாகும். உலக வரலாற்றில் தங்கத்தின் விலை வீழ்ச்சியடைந்து தொடர்ந்து இரண்டு வருடங்களுக்கு மேலாக முதல் இருந்த நிலையை அடைய முடியாமல் இருப்பது இதுவே முதற் தடைவையாகும். முன்னர் வீழ்ச்சியடைந்தாலும் சில மாதங்களில் பழைய நிலைக்கு சென்றுள்ளது. உலகத்தில் சில நாடுகள் தங்கத்தின் இருப்பை சந்தைக்கு விட்டமையே இவ்வீழ்ச்சிக்கு காரணமாக இருந்தது. பல வங்கிகளில் அடைவு வைத்தவர்கள் இவ்விலை வீழ்ச்சியினால் தங்க நகைகளை மீட்காது விட்டமையால் வங்கிகள் நட்டமடைந்தன. வரைபடம் 4 இவ்விலை வீழ்ச்சியின் போக்கை காட்டுகின்றது.

2. களவு கொள்ளை மற்றும் உயிர் ஆபத்து.
ஆசிய நாடுகளில் சட்டம், ஒழுங்கு, பொலிஸ் நிர்வாகம், ஒழுங்கின்மை காரணமாக தங்க நகைகளில் சேமிப்பதால் உயிர் ஆபத்துக்களும் இடம்பெற்றுள்ளன. யாழ்மாட்டத்தில் பல உயிர் இழப்புக்கள் தங்க நகை அபகரிப்பால் இடம் பெற்றுள்ளன. பொலிஸ் நிர்வாக சிறப்பாக இருந்தால் இவ் விளைவினை தடுக்கலாம்.

3. தொழில் நுட்பத்தின் முன்னேற்றம் தங்கத்தின் விலை வீழ்ச்சிக்கு இட்டுச் செல்லலாம். புவியை விட ஏனைய கிரகங்களில் தங்கம் அதிகளவில் இருப்பதாக ஆய்வுகள் குறிப்பிடுகின்றன. தொழில்நுட்ப முன்னேற்றமானது குறைந்த செலவில் தங்கத்தை பூமிக்கு கொண்டுவர உதவும் போது தங்கத்தின் விலை வீழ்ச்சியடைந்து அதன்வழி தங்க நகைகளில் சேமிப்பவர்கள் இழப்புக்களை எதிர் கொள்ளலாம். இருப்பினும் உலகத்தில் தங்கத்தின் இருப்பை அதிகமாக கொண்ட நாடுகளான அமெரிக்கா (8133.5 தொன்கள்) ஜேர்மனி (3383.4 தொன்கள்) பிரான்ஸ் (2435.7 தொன்கள்) ஜப்பான் (765.2 தொன்கள்) சீனா (1054.1 தொன்கள்) போன்றன இவ்வாறான தொழில்நுட்பத்துக்கு உதவும்போது அவர்கள் பாரிய நிதி இழப்பை சந்திக்க வேண்டி வரும் என்பதால் இந்த கண்டுபிடிப்புக்களை செய்ய தயங்குவார்கள்.

4. உலகில் பலமான நாடுகளின் நாணயங்கள் நன்மதிப்பை பெறுகின்ற போது தங்கத்தில் சேமித்தவர்கள் வலுவான நாணயங்களுக்கு தங்கள் சேமிப்பை மாற்றும் போது தங்கத்தின் விலை வீழ்ச்சியடையாலாம். மறுபுறத்தில் உலகில் பலமிக்க நாணயங்களில் நம்பிக்கையீனம் ஏற்படும் போது அந்த நாணயத்தில் சேமித்தவர்கள் தங்கத்தை நாடுவார்கள். இதன் காரணமாக தங்கத்தின் விலை அதிகரித்து தங்க நகையில் சேமிப்பவர்கள் அதிக நன்மையினை அடைவார்கள். 2001-2012 க்கும் இடையில் யூரோ நாணயத்தில் இருந்து சில நாடுகள்

விலகப் போவதாக வெளிவந்த செய்திகளும் யூரோவில் சேமித்தவர்களை தங்கத்தில் சேமிக்க தூண்டி தங்கத்தின் விலை அதிகரித்துள்ளது. இக் காலப்பகுதியில் அமெரிக்கப் பொருளாதாரத்தின் ஸ்திரமற்ற தன்மை மற்றும் ஐக்கிய இராட்சியத்தின் பொருளாதார மந்த நிலைகள் யூரோவில் சேமிப்பை விலக்கியவர்களை அமெரிக்க டொலரில் அல்லது ஸ்ரேலிங் பவுனில் சேமிக்க தூண்டவில்லை. இந்நிலைமை தங்கத்தின் விலை அதிகரிப்புக்கு காரணமாக இருந்தது. எனவே வன் நாணயங்கள் மற்றும் அவை சார்ந்த பொருளாதாரங்களின் ஸ்த்திரத்தன்மை தங்கத்தின் விலையில் செல்வாக்கு செலுத்துகின்றது.

**5.** தங்க இருப்பை அதிகமாக கொண்ட நாடுகளின் பொருளாதாரம் மந்தமடைகின்ற போது அவை பிரதானமாக இரண்டு வழிகளில் மீள முயல்கின்றன. முதலாவது நாணயத்தை பெறுமதி இறக்கம் செய்வதன் ஊடாக நாணய உட்பாய்சல்களை ஊக்குவித்து சென்மதிநிலுவையில் சமநிலையைக் கொண்டு வருதல். இரண்டாவது தங்க இருப்பை விற்றல். முதலாவது உலக சந்தையில் தங்கத்தின் விலையை அதிகரிக்கின்றது. இரண்டாவது உலக சந்தையில் தங்கத்தின் விலையைக் குறைக்கின்றது.

உதாரணமாக அமெரிக்கப் பொருளாதாரத்தில் மந்தம் ஏற்ப்படும் போது டொலரின் பெறுமதி குறைக்கப்படும்போது டொலரில் சேமித்தவர்கள் நிட்சயமற்ற தண்மை காரணமாக தங்கத்தை நாடுவதால் தங்கத்தின் விலை அதிகரிக்கலாம். அமெரிக்கா தங்கத்தை விற்க்கும் போது உலக சந்தையில் தங்கத்தின் நிரம்பல் அதிகரித்து தங்கத்தின் விலை வீழ்ச்சியடையலாம். வரைபடம் 5 அமெரிக்காவின் பொருளாதார மந்தத்திற்க்கும் உலக சந்தையில் தங்கத்தின் விலை வீழ்ச்சியையும் எடுத்து காட்டுகின்றது. நிழற்படுத்தப்பட்ட காலம் மந்த காலம் ஆகும். இக்காலம் பலவற்றில் தங்கத்தின் விலை வீழ்ச்சியடைந்துள்ளது.

6. அரசுகளின் கொள்கைகளில் ஏற்படும் தீடீர் மாற்றங்களும் தங்கத்தின் விலையில் தாக்கத்தை ஏற்படுத்தி தங்க நகைகள் மீதான சேமிப்புக்களில் இழப்புக்களை உருவாக்கலாம். 2013 க்கு பின்னர் தங்கத்தின் விலை வீழ்ச்சிக்கு காரணம் பல நாடுகள் தங்கள் தங்க இருப்பை குறைத்து அவற்றை உலக சந்தையில் விற்றமை ஆகும்.

## தொகுப்புரை

தமிழ் மக்கள் கடந்த 30 வருடங்களுக்கு மேலாக தாய் நாட்டில் உழைத்து சேமிப்பதை விட வெளி நாடுகளில் அதிக அளவில் உழைத்து அதை தாய் நாட்டுக்கு அனுப்புகின்றனர். இந்த சேமிப்புக்களை 2013-2015 காலப்பகுதி நீங்கலாக ஏனைய காலங்களில் தங்க நகைகளில் முதலிட்டமை முதல் நயத்தையும் உளத்திருப்தியையும் ஏற்ப்படுத்தி இருக்கின்றது. வங்கிகளில் வைப்புச் செய்தல் பணவீக்கம் மற்றும் குறைந்த வட்டி வீதம் காரணமாக வட்டிகளின் இழப்பையும் முதல் இழப்பையும் உருவாக்கியுள்ளது. தங்க நகைகளில் சேமித்தல் எமது கலாச்சாரத்துடன் இணைந்து காணப்படுவதால் இவை பல நன்மைகளை கொண்டிருக்கின்றன. இருப்பினும் தங்க நகைகளில் சேமிப்பது நாட்டின் பொருளாதார ஸ்த்திரத்தன்மை, தங்க இருப்பை அதிகமாக கொண்ட நாடுகளின் பொருளாதார நிலைமைகள், உலகின் வன்நாணயங்களின் ஸ்த்திரத்தன்மை, தங்கத்துக்கு பதிலீடாக பயன்படுத்தக்கூடிய நிதிச் சொத்துக்களின் விலைகளின் போக்குகள் போன்ற பல காரணிகளால் தீர்மானிக்கப்படுகின்றன. இலங்கையில் தங்கத்தின் விலையை தீர்மானிப்பதில் அமெரிக்காவில் தங்கத்தின் விலை மற்றும் இந்தியாவின் தங்கத்தின் விலைகள் முக்கிய பங்கினை வகிக்கின்றன. தமிழர்கள் வெளிநாடுகளில் திரட்டும் சேமிப்புக்களை முதலீடு செய்வதற்கு தாய் நாட்டில் உறுதியான பிற முதலீட்டு வாய்ப்புக்கள் இல்லாத காரணத்தால் தங்க நகைகளில் முதலிடுவதன் மூலம் ஒப்பீட்டு ரீதியில் அதிக நன்மைகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

## References


1. Alan Greenspan (2017) Dr Alan Greenspan on stagflation, indebtedness, despair and the role of gold, Gold Investor, Febtuary 2017, Would gold council.
2. Amirthalingam, K. and R. W. D. Lakshman (2010), "Financing of Internal Displacement: Excerpts from the Sri Lankan Experience", Disasters, 34(2), pp. 402-425.
3. Amirthalingam, K. and R. W. D. Lakshman (2009), "Displaced livelihoods in Sri Lanka: An economics analysis", Journal of Refugee Studies, 22(4), pp. 502-524.
4. Gh Deepak Kumar Adhana (2015) An Introduction of Gold scheme in 2015 in India, International Journal of Research –GRANTHAALAYAH, Vol.3 (Iss.11): November, 2015]
5. John Maynard Keynes (1936) The General Theory of Employment, Interest, and Money, Rendered into HTML on Wednesday April 16 09:46:33 CST 2003, by Steve Thomas for The University of Adelaide Library Electronic Texts Collection.
6. Suren Gnanaraj (2003 ) Jaffna's classic British cars, Sundaytime, 31 2003
7. Sarvendra Tharmalingam (2013) Remittances, standards of living and integration: a study of tamils living in Scandinavian capitals, The project is financed by The Research Council of Norway
8. ***Suren Gnanaraj (2003)*** Illicit dealers offer fast money transfers http://www.sundaytimes.lk/030831/ft/3.htm
9. ***Suren Gnanaraj (2003)*** Gold jewellery still banned in Jaffna, http://www.sundaytimes.lk/030831/ft/12.htm
10. Sudha, Ms.R.Buvaneswari, Ms.P.V.Pothigaimalai, Ms.N.Subasri (2014) A Study on Investment Pattern Investors of Jewellery at Pattukkottai Town, International Journal of Engineering Research, Volume No.3, Issue No.11, pp : 677-682.
11. Michael Calavan (2011) Political-Economy Profiles A Brief Report on the Business Environment of Jaffna Town Produced by Michael Calavan and staff of The Asia Foundation, Colombo
12. ஔவையார்-நன்நெறி
13. இலங்கை மத்திய வங்கி அறிக்கை 2013, மத்திய வங்கி, பொழும்பு, இலங்கை.

**அட்டவணைகள்**

**அட்டவணை 1. இலங்கைக்கான வெளிநாட்டு பண அனுப்புதல்கள் 2004-2013**

US dollars million

| பிராந்தியம் | 2004 | 2005 | 2006 | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மத்தியகிழக்கு | 868 | 1089 | 1234 | 1451 | 1745 | 1995 | 2474 | 3030 | 3358 | 3562 |
| ஐரோப்பிய யுனியன் | 286 | 355 | 411 | 500 | 525 | 603 | 724 | 885 | 1071 | 1160 |
| தூரகிழக்கு ஆசியா | 76 | 86 | 110 | 135 | 175 | 203 | 247 | 401 | 509 | 557 |
| ஏனைய ஐரோப்பா | 129 | 135 | 143 | 135 | 128 | 148 | 177 | 232 | 275 | 308 |
| வடஅமெரிக்கா | 105 | 125 | 119 | 105 | 114 | 127 | 140 | 154 | 174 | 186 |
| தெ.கி.ஆசியா | 32 | 38 | 52 | 75 | 90 | 100 | 144 | 206 | 263 | 288 |

Source: Central Bank of Sri Lanka 2013

ஆட்டவணை 2

| | 1983 முன்னர் தமிழர்களின் சேமிப்பு | 1983 பின்னர் தமிழர்களின் சேமிப்பு |
|---|---|---|
| 1. | விவசாய வெளியீட்டில் இருந்து கிடைத்தன | வெளிநாட்டு பண வருவாய்களில் இருந்து கிடைக்கின்றன. |
| 2. | சேமிப்புக்கள் உள்நாட்டில் வடக்கு மற்றும் கிழக்கில் முதலீடு செய்யப்பட்டன. | சேமிப்புக்கள் தென்பகுதிக்கு அனுப்பப்படுகின்றன. இங்கு முதலீடு செய்வது குறைவானதாக காணப்படுகிறது. |
| 3. | சேமிப்பு கருவிகள் அமைக்கப்படாத துறையாக காணப்பட்டன. | சேமிப்பு கருவிகள் அமைக்கப்பட்ட, நிறுவனமயப்படுத்தப்பட்வையாக உள்ளன. |
| 4. | சேமிப்பாளர்கள் உயர் குழாம் அல்லது உயர் சாதியினராக இருத்துள்ளனர். | அநேகமானவர்கள் இடை நிலை அல்லது குறைந்த சாதியமைப்பில் உள்ளவர்களாக காணப்படுகின்றனர். |
| 5. | சேமிப்புக்கள் இயற்கை மாற்றத்தால் தளம்பலடைந்தன. | சேமிப்புக்கள் உறுதியானதாக உள்ளன. |
| 6. | சேமிப்புக்கள் ஆடம்பரத் தேவைகளுக்கு பயன்படுத்தப்பட்டமை குறைவாக இருக்கிறது. | சேமிப்புக்கள் ஆடம்பர தேவைகளுக்கு அளவுக்கு அதிகமாக பயன்படுத்தப்படுகின்றன. |
| 7. | சேமிப்புக்கள் வீண்விரயமாக்கப்பட்டமை ஒப்பீட்டு ரீதியில் குறைவாகும். | வீண்விரயமாக்கப்படுதல் அதிகமாகும். |
| 8. | சேமிப்புக்கள் தமிழ் கலாச்சாரம் பண்பாடு விழுமியங்களை பாதுகாத்தன | சேமிப்புக்கள் தமிழ் கலாச்சாரப் பண்பாடு விழுமியங்களுக்கு அச்சுறுத்தலாக உள்ளன. |
| 9. | சேமிப்புக்களின் பெறுமதி குறைவாகும் | சேமிப்புக்களின் பெறுமதி அதிகமானதாகும். |
| 10. | சேமிப்பு கூட்டாக இருந்தது. (குடும்ப அங்கத்தவர்கள் எல்லோரும் ஓரே அலகு) | கூட்டு சேமிப்பு இருந்த போது தனிச் சேமிப்புக்கள் அதிகமானதாகும். |

வரைபடங்கள்


**வரைபடம் 1: உலக சந்தையில் தங்கத்தின் விலையின் போக்கு**





**வரைபடம் 2. இந்தியவில் தங்கத்தின் விலையின் போக்கு**



**வரைபடம் 3: இலங்கையில் தங்கத்தின் குறும்கால விலையின் போக்கு**




**.வரைபடம் 4: இலங்கையில் தங்கத்தின் விலை வீழ்ச்சி (2010-2015)**



**வரைபடம் 5: அமெரிக்காவின் பொருளாதார மந்தமும் தங்கத்தின் விலைத்தளம்பலும்**

